**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகம் - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த தேசிய நூலக மற்றும் தகவல் விஞ்ஞான நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்புடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைபழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்றவரையில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளுக்கு தொடர்புடைய பொருண்மையான தவறுகள் திருத்தப்படும் போது பிழை ஏற்பட்ட காலப்பகுதிக்காக முன்வைக்கப்பட்டுள்ள ஒப்பீட்டு பெறுமதிகள் மீண்டும் மறுசீரமைக்கப்பட்டு கடந்த காலத்திற்கு தொடர்பாக சீராக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 3,735,649 ஆன முன் ஆண்டுகளின் பிழை திருத்தங்கள் திரண்ட இலாபத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக மேலும் கற்று வருகின்ற கணக்குகள் தயாரிக்கப்படும் போது இந்த விடயம் தொடர்பாக கவனம் செலுத்தப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 இற்கு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் 01 மாதம் தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான கால வீச்சில் இலிருந்து காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 983,150 ஆன நேரடி வரவுகள் அடையாளப்படுத்தப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் இந்த நேரடி பொறுப்புக்கள் அனைத்தும் அடையாளப்படுத்தப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளதென. | நேரடி வரவுகள் சரியான காலத்தில் அடையாளப்படுத்தப்படுவதற்கு கூடிய வகையில் முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஆ) பல ஆண்டுகளுக்கு முன்னர் உயர் கல்வி அமைச்சின் ஊடாக பெறப்பட்டிருந்த ரூபா 23,132,739 ஆன அளிப்புக்கள் மற்றும் நிறுவக அபிவிருத்தி நிதியத்தினால் ஏற்கப்பட்ட ரூபா 1,839,127 மீளாய்வாண்டினுள் திரண்ட நிதியத்திற்கு எதிராக காலக்கழிவாக பதிவழிக்கப்பட்டிருப்பினும் அதற்கு தொடர்புடைய தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | அவ் அளிப்புக்கள் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தும் தற்போது முழுமையாக தேய்மானம் ஆகியிருந்தமை அவ் ஆவணங்கள் கற்று உறுதி செய்யப்பட்டமையினால் தொடர்புடைய ஆவணங்கள் இணைக்கப்பட்டு நாளேட்டு குறிப்புக்கள் ஊடாக தொடர்புடைய அளிப்புக்கள் முழுமையாக காலக்கழிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | போதுமான சாட்சிகளுடன் தொடர்புடைய அங்கீகாரத்தின் பிரகாரம் நாளேட்டு பதிவேடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்திற்காக விரிவிரையாளர் பதவியில் பதவியொன்று காணப்படுகையில் கல்வி கற்கைநெறிகள் நடத்தப்படுவதற்காக 68 வெளி விரிவுரையாளர்களின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டு அதற்காக மீளாய்வாண்டினுள் கூட்டுத்தொகை ரூபா 3,245,000 செலுத்தப்பட்டிருந்தது. வெளிபுற விரிவுரையாளர்கள் ஈடுப்படுத்தப்படும் போது வள தொகுதியொன்று ஏற்படுத்தப்பட்டு அங்கீகாரமொன்று பெறப்பட்டுள்ளமைக்கான சாட்சி கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | வெற்றிடமான விரிவுரையாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் கொவிட் 19 நோய் நிலைமையினால் நேர்காணல் நடத்தப்படுவதற்கு இயலாமையானதென. 2020 ஆம் ஆண்டில் நிறுவகத்தில் இரு விரிவுரையாளர்கள் மட்டும் காணப்பட்டதுடன் ஒருவர் பணிஓய்வு விடுமுறை (sabbatical leave) பெறப்பட்டிருந்தார். அக் காரணத்தினால் வெளிபுற விரிவுரையாளர்கள் பலரின் சேவை பெற்றுக் கொள்வதற்கு நேர்ந்ததென. | அங்கீகரிக்கப்பட்டுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியதுடன் அவ்வாரற்ற சந்தர்ப்பங்களில் வருடாந்தம் அங்கீகரிக்கப்படுகின்ற வள தொகுதியில் வெளிபுற விரிவுரையாளரொருவர் ஈடுப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 ஆம் வழிக்காட்டிகள | அரச பெறுகை வழிக்காட்டி ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை திட்டமொன்று மற்றும் நேர அட்டவனையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. தொடர்புடைய பெறுகை திட்டம் மற்றும் நேர அட்டவனை கல்வி அமைச்சின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு அமைச்சிற்கு வருடாந்தம் முன்வைக்கப்படப்படுகின்றதென பெறுகை திட்டத்திற்கு விரிவான பெறுகை திட்டமொன்று எங்களால் முன்வைக்கப்பட்டாதது கட்டிட நிர்மானிப்பு, ஏனைய அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் பாரியதாக செயவிடப்படுகின்ற பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளமையினால் என. | அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 | மீளாய்வாண்டிற்காக | நிறுவகத்தின் செயல் நடவடிக்கை திட்டத்திற்காக அங்கீகாரம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக்கொள்ளல் தாமதமாகியதற்கு சில விடயங்கள் காரணமாகின என மற்றும் எதிர்காலத்தில் குறித்த வண்ணம் செயல் நடவடிக்கைத் திட்டம் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தினுள் நிறுவகத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் வருடாந்தம் அடையப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 1995 யூலை 14 திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு சபையின் சுற்றறிக்கை | 2018 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை நடத்தப்பட்டிருந்த 13 பரீட்சைகளுக்கு தொடர்புடைய பெறுபேறுகள் 2021 ஏப்ரல் வரை வெளியிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 21 கற்கைநெறிகளின் 20 பரீட்சைகளுக்கு தொடர்புடைய பெறுபேறுகள் வெளியிடப்படும் போது 03 மாதங்கள் தொடக்கம் 01 ஆண்டு வரை தாமதமாகியிருந்தது. | பல்கலைக்கழக கல்விசாரா பதவியணியினர் வேலைநிறுத்தங்கள் (2019 செப்தெம்பர்) மற்றும் 2020 கொவிட் -19 வைரஸ் நிலைமையின் மீது தொடர்புடைய பரீட்சை நடவடிக்கைகள் மற்றும் பெறுபேறுகள் வெளியிடல் தாமதமாகல் காணப்பட்டது. நிறுவகம் இது வரையில் பெறுபேறுகள் வெளியிட்டது அனைத்து செமஸ்டர் பரீட்சைகள் மற்றும் செயற்திட்ட அறிக்கைகள் சமர்ப்பித்த பின்னராகும். எதிர்காலத்தில் பரீட்சை பெறுபேறுகள் செமஸ்டர் வண்ணமாக வெளியிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 திகதிய பீஎடி/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் உறுப்புரை | நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்படாது நிறுவகத்தினால் ரூபா 4,000,000 நிலையான வைப்புக்களில் முதலிடப்பட்டிருந்தது. | அனைத்து நிலையான வைப்புக்களும் முதலிடும் போது திறைச்சேரி அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. தொடர்புடைய ஆவணங்கள் பரீசித்து இது தொடர்பாக உறுதி செய்யக்கூடும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் முதலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,523,877 ஆன பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,794,584 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 4,318,461 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வீழ்ச்சிக்கு வருமானம் ரூபா 3,140,645 இனால் குறைதல் மற்றும் செலவினம் ரூபா 1,177,816 இனால் அதிகரித்தல் பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செய்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 இற்கு ரூபா 6,394,845 ஆன பெற வேண்டிய மாணவ கட்டண வருமானத்தில் (Receivables from Students) 01 ஆண்டிற்கு அதிகமான ரூபா 2,515,788 ஆன கடன் பட்டோர் மீதி அறவிடப்படுவதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் 1 ஆண்டிற்கு அதிகமான கடன் பட்டோர் மீதியில் இன்னுமாக செயற்படுத்தப்படுகின்ற கற்கைநெறிகளில் மாணவர்களிடமிருந்து பெற வேண்டிய பணமும் உள்ளடங்கும். அவை எதிர்காலத்தில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய மாணவ வருமானம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |